# ஒரு பானை
# ஸ்ரீ லங்காவில்
# பசிதீர்க்க பகிர்ந்திடுவோம் வாரீர்



அன்பும் பண்பும் நிறைந்த நல்லோர்களே!

கடந்த அரையாண்டுகாலம் எம்மவரைத் திகிலுகுள்ளாக்கிய தீய “கோவிட்19“ கொடுந்தொற்றிலிருந்து விடுவித்து வென்றிருப்பீர்களென நம்புகிறோம்.

இத்தருணம் ஒரு முக்கிய விடயத்தை நினைவுகூர விரும்புகிறோம்: **“ஒரு பானை“**, (**ஒ. பா.**) தங்கள் ஒப்பற்ற உதவியின்றி, தாய் நாட்டில், எமது தொப்புள்கொடி உறவுகளுக்கு உரிய அரிய தொண்டுகளை நிறைவேற்றியிருக்கவே முடியாது.

**தொடர்ந்து தந்த தங்கள் பிரார்த்தனைகளுக்கும் பேருதவிகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.**

**பகிர்ந்துண்ணும் பண்புடை பாரம்பரியம் – அமைதியான ஆரம்பம்**

*எமது “பானை“ மூலம் பொறுப்புடன் பகிர்ந்திடுவோம் – திசையற்றோர் பசிப்பிணியைப் போக்கிடுவோம்*

### ஸ்ரீலங்காவில் “கோவிட் 19“ தொற்றினால் பாதிக்கப்பட்டோருக்கு “ஒரு பானை“ எவ்வாறு உதவியுள்ளது?

“கோவிட் 19“ முதன் முதலாக ஸ்ரீ லங்காவைத் தாக்கியபோது, நாடார்ந்த ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் விளைவாக நாம் வழங்கிவந்த உலர்ந்த உணவுப்பண்ட வினியோகமும் அன்னதானம் முதலானவையும் நிறுத்தப்பட்டது. ஊரடங்குச் சட்டத்தின் விளைவாக வாழ்வாதாரம் வழங்குவோர் தொழிலற்றோராக்கப்பட்டு உணவுக்கு வழியின்றித் தவித்தனர். வடமாகாணத்தில் உலர்ந்த உணவுப்பண்டங்களை உடனடியாகத் தேவைப்பட்டோருக்கு வழங்கிவந்த யாழ். மருத்துவ மாணவர் குழுவின் வேண்டுகோளை ஏற்று, ஒ. பா. அவர்களுக்கு ஸ்ரீ லங்கா ரூபா 500,000 வழங்கி அவர்களது அரிய சேவைக்கு உதவிக்கரங்களாயிருந்தோம்..



உலர்ந்த உணவுப் பொதிகள் பெற்றோர்

மலையக மக்களின் அவலங்களை நேரிற்கண்டறிந்த ஸ்ரீ லங்கா ஒ.பா. தலைவர் திரு. ஸ்கந்தகுமார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பெருமளவு பாதிக்கப்பட்டோருக்கே உதவும்வண்ணம் ஸ்ரீ லங்கா ரூபா 150,000 வழங்கினோம். அவசரகால மனிதாபிமான நடவடிக்கைகளையும் எடுத்திருந்தோம்.. இந்த உதவிகளை மிகவும் சந்தோஷமாகச் செய்யக்கூடியதாயிருந்தது..

### “ஒரு பானை“ தனது வழமையான செயற்பாடுகளை மீளவும் ஆரம்பித்துவிட்டதா?

லங்கா அரசு தனது கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதும், பட்டினியால் வாடுவோருக்கு உதவும் தேவையான சேவைகளை ஒ. பா. தாமதமின்றியே ஆரம்பித்தது என்பதை அறியத்தருவதில் பெரும் ஆனந்தமடைகிறோம். வடக்கிலும் வன்னியிலும் முன்னர் ஆதரவுகொடுத்த 500 முதியோர் அனைவருக்கும் உலர் உணவுப் பதார்த்தங்களை வழங்கிவருகிறோம். மேலும், கிழக்கிலும் நானு ஓயாவில் இரு தோட்டப்பகுதியிலும் உள்ள 200 முதியோருக்கும் உதவி வழங்கும் வண்ணம் எமது திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளோம். இதில் முதியோர், ஊனமுற்றோர், பவவிதமாகப் பாதிக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர் அனைவரும் அடங்குவர். பெரும்பாலனவர்கள் 75 வயதுக்கு மேற்பட்டோரே. அவர்களுக்கு ஒழுங்கான வருமானம் எதுவும் இல்லை. **நிஜமாகவே, இந்த மக்களுக்கு, எமது உதவி, அவர்களது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த நல்ல நம்பிக்கை கொடுக்கிறது.**

இறந்தோரை எழுப்புதலிலும் பளு நிறை பசியைப் போக்கல் பெரும்பாடு – கொன்ஸ்தந்தினோப்பிள் பேராயர் கிறிஸோஸ்த்தம் பரி, யோவான் (கி.மு. 349-407)



பிரித்தானியாவில் தரும ஸ்தாபனமாகப் பதிவு செய்யப்பட்ட இல. 1136376

ஊட்டச்சத்து குறைபாடுள்ள பாலகர்க்கான சத்து மா போன்ற போஷாக்கு நிறைந்த உணவுகள் வழங்கலை உலகார்ந்த இக்கொடுந்தொற்றுக்கு முன்னர் இருந்த அளவு திரும்பவும் ஆரம்பித்துள்ளோம்.

**விலைமதிப்பற்ற மலையொத்த சேவையினைத் தொடர்ந்திட வாரி வாரி வழங்கிடுவீர் – வாழ்வளித்திடுவீர்)**

பெருமளவு வரவேற்கப்பட்ட ஊற்று நீர்க்கிணறுகளை ஸ்தாபித்தல் முன்னர்போல தொடர்கிறது.. 2020ல் மேலும் 30 கிணறுகள் ஸ்தாபிக்கவும் நம்பிக்கையுடனிருக்கிறோம்

கோவிட் 19 தொற்றின் விளைவான சமூக கட்டுப்பாட்டு விதிகளுக்கமைய எமது நிதி சேகரிக்கும் நிகழ்ச்சிகள் தடைப்பட்டுள்ளன. **அன்பு நெஞ்சங்களே, கொவிட் 19 தொற்றைத் தொடந்து இது மாபெரும் சவாலாக இருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். பசி தீர்க்கும் பணிக்கு வருடம் £60,000 வருடாவருடம் தேவைப்படும் 30 நீரூற்றுக் கிணறுகளைக் கட்டமைக்க £25,000 மேலதிகமாகத் தேவைப்படும்.**

எமது வழமையான நன்கொடையாளர்களிடமிருந்து வருடாவருடம் £20,000 பெறப்படும். நாட்டியங்கள், இசை நிகழ்ச்சிகள் ஆதரவுடன் நிகழும் துவிச்சக்கர ஓட்டங்கள் இத்தியாதி மூலம் நிதிக் குறைபாட்டினை நிவர்த்திசெய்வது வழமை. சமூக சுகாதாரக் கட்டுப்பாடு காரணமாக இந்நிகழ்ச்சிகள் யாவும் சடுதியாக ஸ்தம்பித்துவிட்டன. ஏறத்தாழ அடுத்த ஒன்றரை வருட காலத்துக்கு இந்நிலை நீடிக்கலாம் – எமது நிதி திரட்டும் முயற்சிகள் ஏதும் நிகழும் வாய்ப்பில்லை.

**எமது சேவைகளைத் தொடர்ந்து நடத்தத் தேவையான நிதி ஒ. பா. யின் இருப்பில் வரயறுக்கப்பட்டுள்ளது. ஏனைய தொண்டாற்றும் நிறுவனங்களைப்போன்று, ஒ. பா. வும் பாரதூரமான நெருக்கடியை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது**

**தற்காலச் சூழலில், ஒரு பானை எவ்வாறு தனது செயற்பாடுகளை நிலைநிறுத்த முடியும்?**

**இப்பாரதூரமான நெருக்கடியைத் தகர்த்தி, ஸ்ரீ லங்காவிலுள்ள எமது வறுமையான உறவுகளுக்கு உதவி புரிய நீங்கள் எவ்விதம் உதவ முடியும்?**



மக்களின் தற்போதைய இக்கட்டான நிதிநிலைமைகளை மனதிற்கொண்டு, கீழ்வரும் ஏதாவது ஒரு வழியில் இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க உங்களால் உதவமுடியும் என ஒ. பா. எதிர்பார்க்கிறது:

- வழமையாக நிதி வழங்குவபராயிருந்தால், உங்கள் மாதாந்த நன்கொடையை அதிகரிக்கலாம்
- வழமையாக நிதியுதவி செய்யாதவராகின், அவரொருவருள் ஒருவராகும் வண்ணம் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்
- முன்னொருதடவை நன்கொடை வழங்கியிருந்தவராகின், தாராளமாக மனமுவந்து வழங்குமாறு வேண்டுகிறோம்.



**உங்கள் வங்கிக் காசோலையை கீழ்வரும் விலாசத்திலுள்ள “ஒரு பானை“ அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கலாம்:**
**Oru Paanai Admin., No. 58, Hungerford Road, Stourbridge, West Midlands DY8 3AB, UK**

- புதியதாக உங்கள் வங்கி மூலம் நிதி ஆணை (Standing Order) ஒன்றை ஆரம்பிக்கலாம் அல்லது மின்வழியாகவும் அனுப்பலாம். – இந்த இரண்டில் ஒரு வழியில் நிதி உதவி வழங்கவேண்டின், மேலுள்ள விலாசத்தில் “ஒரு பானை“ பணிவகத்துக்கு எழுதவும்
- விஷேஷமாக உங்கள் அன்புக்குரியவரின் ஞாபகார்த்தமாகவோ – ஒருவரின் விஷேஷ பிறந்த நாளைக் கொண்டாடும் முகமாகவோ அல்லது ஏதாவதொரு வருடாந்த விழாவினைக் கொண்டாடும் முகமாகவோ உதவ விரும்பின், 50 முதியோருக்கு £25 பெறுமதியான அன்னதானம் வழங்கலாம் – அல்லது



£300 பெறுமதியான உலர்ந்த உணவுப் பதார்த்தங்களை 50 பேருக்கு 4 வாரங்களுக்கு போதுமானளவு உங்கள் பரிசாக வழங்கலாம்

- உரிய உதவிக்கு, தயவுசெய்து எம்மைத் தொடர்பு கொள்க – பெருமகிழ்வுடன் வரவேற்போம்.

**என்றுமில்லாதவாறு பரிதவிக்கும், ஸ்ரீ லங்காவிலுள்ள உங்கள் பந்துமித்திரர்களுக்கு "ஒரு பானை" மூலம் அதி அவசரமாகத் தேவைப்படும் உங்கள் பேருதவியை இன்றே தாமதியாது வழங்குங்கள்.**

**மனமார்ந்த நன்றிகள்**
***பேராசிரியர் இரா.சுவாமிநாதன்***
**தலைவர்**

***வைத்திய கலாநிதி* S V தேவேந்திரா**
**கூட்டுச் செயலாளர்**

**குறிப்பு**: "ஒரு பானை" இணையத்தளம், அண்மையில் நிகழ்ந்தனவற்றைப் பிரதிபலிக்கும் முகமாக புதிப்பிக்கப்படுகிறது. செப்டம்பர் 2020 ல் இது பூர்த்தியாகும் – "ஒரு பானை" யின் இன்றைய சேவைகளை "orupaanai.org.uk" எனும் இணையத்தை அணுகுங்கள்



